(ஆ) வினாக்கள்-விடைகள் நேரம் இடம்பெறாததும், விடைகளை துறைகள் விரைந்து அனுப்பிட அமைச்சர்கள் அறிவுரை வழங்குதலும்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. மாண்புமிகு பேரவை உறுப்பினர்களிடமிருந்து வரப்பெற்ற வினாக்கள் அனுமதிக்கப்பட்டு, இச்செயலகத்தின்மூலம் சம்பந்தப்பட்ட துறைகளுக்கு விடைகள் பெறும்பொருட்டு அனுப்பிவைக்கப்பட்டு வருகின்றன. வினாக்களுக்கான விடைகள் துறைகளிடமிருந்து போதிய அளவில் பெறும்வரை, ஏற்கெனவே அலுவல் ஆய்வுக் குழுவில் முடிவெடுத்தவாறு ஒவ்வொரு நாள் கூட்டத்தின் முதல் ஒரு மணி நேரம் வினாக்கள் கேட்டு, விடைகள் அளிப்பதற்கு ஒதுக்கப்பட வேண்டும் எனும் சட்டமன்றப் பேரவை விதி 32-ஐ பேரவையின் ஒருமித்த அனுமதியுடன் தளர்த்தியும், சில நாட்களுக்கு வினாக்கள்-விடைகள் நேரம் இடம் பெறாது எனத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், வினாக்கள்-விடைகள் நேரத்தை பேரவைக் கூட்ட நிகழ்ச்சி நிரலில் விரைவில் இடம் பெறச் செய்யும்வகையில், விரைந்து விடைகளை அனுப்ப, துறைச் செயலாளர்களிடத்திலும், தலைமைச் செயலாளரிடத்திலும் நான் நேரில் அறிவுறுத்தியிருக்கிறேன். வினாக்களுக்கான விடைகள் விரைந்து அனுப்ப நடவடிக்கைகள் மேற்கொள்ளும்பொருட்டு துறைச் செயலாளர்களுக்குத் தகுந்த அறிவுரைகளை வழங்குமாறும் மாண்புமிகு அமைச்சர்களையும் மீண்டும் கேட்டுக்கொள்கிறேன்.

(இ) மாற்றுத் தலைவர்கள் பட்டியல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 9(1)-ன்கீழ், கீழ்க்காணும் உறுப்பினர்களை இப்பேரவையின் இரண்டாம் கூட்டத் தொடருக்கான மாற்றுத் தலைவர்களாக (Panel of Chairmen) நியமிக்கிறேன்:

1. திரு. க. அன்பழகன்
2. திரு. நா. இராமகிருஷ்ணன்
3. திரு S.R. இராஜா
4. திரு. தா. உதயசூரியன்
5. திரு. துரை. சந்திரசேகரன்
6. முனைவர் T.R.B. ராஜா